# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




‘சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்’.



மன்னா – 9 பெப்ரவரி 2020 பிரதி – 11



## ஆயர் மடல்



சோதனையில் சாதனை புரிய சமாதானமாய் வழிநடத்தும் கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

2020-ம் ஆண்டின் முதல் மாதத்தை நிறைவு செய்யவும், புதிய மாதத்தை தொடங்கவும் கர்த்தர் நமக்கு உதவி செய்தார் ஆண்டவரை தோத்தரிப்போம்.

### எதிர்கொள்வோம் :-

ஒரு மனிதனுடைய வாழ்வில் அவன் சந்திக்கும் சோதனையே அவனை சாதனையாளனாக மாற்றுகிறது என்பதுதான் உண்மை. 'நீர் என்னை சோதித்த பின் பொன்னாக விளங்குவேன்' என யோபு பக்தன் தன் வாழ்வின் சோதனையை எதிர்கொள்கிறான்.

உலக வாழ்வில், சபை வாழ்வில், குடும்ப வாழ்வில், தனி வாழ்வில் நாம் சந்திக்கும் சோதனைகளை எதிர்கொள்ளும் மன ஆற்றலே சாதனைக்கு வழிநடத்துகிறது என்பதை உணர்வோம்.

ஆற்றின் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் மீனிற்கு உயிரில்லை, ஆற்றல் இல்லை. ஆனால் ஆற்றல் தரும் ஆண்டவர் இயேசு நமக்குள் இருக்க புதிய சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றல் வேண்டி மன்றாட்டோடு எதிர்கொள்ளவே ஆண்டவர் விரும்புகிறார்.

### எதிர்பார்ப்போம்:-

இறை ஆற்றலோடு எதிர்கொள்ளும் சோதனைகளில் சாதனைகளையும், சாதனைக்கான பரிசுகளையும் எதிர்பார்ப்பது உண்மை. உலக வாழ்வில் ஆண்டவருக்கு உண்மையாய் மற்றவர்களை புண்படுத்தாதபடி புரிந்துகொண்டு என்னால் யாருக்கும் ஒரு கடினப்பாடு வரக்கூடாது என்பதிலே உறுதியாயிருந்து, நாம் சாதிக்கும் சாதனையின் பலனே சந்தோஷமான, நிலையான மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியின் துவக்கம் குடும்பம். குடும்ப வாழ்விலிருந்து திருச்சபை வாழ்வு, சமூக வாழ்வு என தொடரும் ஒன்றாக, வளரும் ஒன்றாக விளங்குகிறது.

எனவே இந்த புதிய மாதத்தில், புதிய தீர்மானங்களோடு வாழ்வை எதிர்கொள்வோம். நம்மை சாதனையாளர்களாய் மாற்றிக்கொள்வோம். இறைவன் அருளும் சன்மானமாகிய சந்தோஷத்தைப் பெறுவோம்.

இறை ஆசி உங்களை நிரப்புவதாக!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## சோதனையில் சாதனை



இறை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இறைத்திட்டத்தில் மனிதனை சாதனையாளராக்கவே ஆண்டவர் விரும்புகிறார். படைப்பாளர் படைப்பின் கருவி கெட்டுப்போக வேண்டும் என நினைப்பது இல்லை. அப்படி நினைத்தால் அவர் உண்மையான படைப்பாளராக இருக்க முடியாது.

அகில உலகைப் படைத்த கடவுள், மனிதனைப் படைத்து அது நல்லது என்று கண்டார். படைப்பனைத்தும் சாதனை செய்ய எதிர்பார்த்த கடவுளுக்கு மிஞ்சியதோ வேதனை. சாதனை செய்யவேண்டிய மனுக்குலம் சோதனையில் விழுந்தது. எனவே ஆதி. 6:6-ல் "தாம் மனுஷனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார் அது அவர் இருதயத்திற்கு விசனமாயிருந்தது".

ஆனால் தேவனாகிய கர்த்தர் மனிதனை கைவிடவில்லை. வாழ்வு தரவேண்டும், மீட்பு தரவேண்டும் என்றே விரும்புகிறார். சோதனையை சகித்து, சாதனையாளராக வேண்டும் என்பதே இறைவிருப்பமாகும். திருமறையில் நாம் காண்போமாயில் சில சாதனையாளர்களை சந்திக்க முடிகிறது.

### 1. சோதனையை சகிக்கிறவன்:-

சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான் (யாக்கோபு 1:12).

பாக்கியவான்கள் வரிசையில் சோதனையை சகிக்கிற மனுஷனுடைய பெயரும் இடம்பெறுகிறது. சோதனையில் நாம் விழுந்து போகிறோம்; மடிந்துபோகிறோம், ஆனால் கிறிஸ்துவுக்காக சகித்து முன்வரவேண்டும் என ஆண்டவர் விரும்புகிறார்.

திருமறையில் சோதனையை சகித்த மனிதனாக யோபு பக்தனைக் காண முடிகிறது. யோபு தனக்கு வந்த எல்லா சோதனைகளையும் தாங்கினான், சகித்தான். தேவனை தூஷிக்கவோ, சபிக்கவோ இல்லை. கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் என்று சொன்ன யோபுவுக்கு இருந்த விசுவாசத்தை யோபு 23:10-ல் வெளிப்படுத்துகிறார். "நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னை சோதித்தபின் பொன்னாக விளங்குவேன்"

சோதனை ஒரு மனிதனை சாதனையாளனாக்கும் என்பதை யோபு அறிந்திருந்தார். நாமும் அறிவோமா? சபிக்கிறவர்களாக அல்ல, சகிக்கிறவர்களாக இருப்போம்.

## 2. சோதனையில் சாதிக்கிறவன்:-

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்கு தப்பித்துக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் (1கொரி. 10:13)

கர்த்தருடைய ஆற்றல் நம்மை சோதனையிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழியை உருவாக்குகிறது.

உண்மையுள்ள மனிதனாயிருந்து மூன்றுவேளையும் ஜெபித்தான் என்ற குற்றத்திற்காக சிங்கக்கெபியில் போடப்பட்டவன்தான் தானியேல். அவனை தப்புவிக்க ராஜா விரும்பியும் இயலாமற்போயிற்று. ஆனால் தானியேல் 6:22-ல் தானியேல் கூறும்போது, ‘‘சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயை கட்டிப்போட்டார்’’.

தானியேல் தேவன் பேரில் விசுவாசித்திருந்தபடியால் அவனில் ஒரு சேதமும் காணப்படவில்லை. சோதனையில் தேவனை விசுவாசிப்போமேயானால் சேதப்படுத்துவதில்லை சாதனை புரிவோம் என்பதை அறிவோம்.

## 3. சோதனையில் சார்ந்திருக்கிறவன்:-

‘‘நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான்; மாம்சமோ பெலவீனமுள்ளது’’ (மத். 26:41).

சோதனை காலத்தில் ஆவியையும், ஆண்டவரையும் சார்ந்திருக்கிறோமா? இல்லை மாம்சத்தையும், உலகத்தையும் நம்பியிருக்கிறோமா? நமக்கு கொடுக்கப்பட்டுள்ள முடிவு; பவுல் அப்போஸ்தலன் கூறும்போது (அப். 20:19) எனக்கு நேரிட்ட சோதனைகளோடும், நான் கர்த்தரைச் சேவித்தேன் என தனது சார்பு நிலையை வெளிப்படுத்துகிறார்.

யோசேப்பு என்னும் மனிதன் அவன் கர்த்தரை மட்டும் சார்ந்து இருந்தான். வாழ்வின் பாதையில் குழியில் இடப்பட்டான் (ஆதி. 37:24), சொந்த சகோதரர்களால் விற்கப்பட்டான் (ஆதி. 37:27). போத்திபாரின் வீட்டில் அடிமையாய் கொண்டுபோகப்பட்டான் (ஆதி. 39:1,2). ‘‘கர்த்தர் யோசேப்போடே இருந்தார்’’ என பலமுறை வருகிறது, காரணம் யோசேப்பு கர்த்தரை சார்ந்து இருந்தான்.

“நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள், தேவனோ இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகுஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு அதை நன்மையாக முடியப்பண்ணினார் (ஆதி. 50:20) என்று கர்த்தரை சார்ந்திருத்தல் நன்மையாக முடிந்ததை வெளிப்படுத்துகிறார்.

சோதனை நிறைந்த உலகில் சாதனையாளராக சோதனைகளை சகிப்போம். சோதனைகளில் கிறிஸ்துவை சார்ந்து இருந்து சாதனையாளர்களாய் மாற ஆண்டவர்தாமே அனைத்து ஆற்றலையும் தந்து வழிநடத்துவாராக. ஆமென்!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுவர் பகுதி

## ஏழெழுபது முறை மன்னிப்போம்!!!



செல்வந்தனாகிய ஒருவனுக்கு எல்லாமும் குறைவில்லாமல் இருந்தது. ஆனால் அவனுக்கோ மனஅமைதி இல்லை. பல்வேறு காரியங்களில் அவன் தன்னை ஈடுபடுத்திக்கொண்டாலும் அந்த நிம்மதி அவனுக்கு கிடைக்கவில்லை. உடனே மாற்றுவழியை அவன் யோசித்தபோது, தனது பட்டினத்திற்கு அருகிலேயே ஒரு முனிவர் தங்கி இருப்பதைக் கண்டு அந்த இடத்திற்கு விரைந்து சென்றான். அந்த நாளிலேயே முனிவரையும் சந்தித்தான். அவரிடம் தனக்கு உண்டான காரியத்தை குறித்து பேசினான். பதிலாக முனிவர் மூன்று வழிகளை சொன்னார். அதை அப்படியே அவன் கடைபிடித்து வந்தான். என்ன ஆச்சரியம் அதன்படியே செல்வந்தனுக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. ஓரிரு தினங்களாம் அந்த இடத்திற்கு வந்து போனதினால் செல்வந்தனுக்கு முனிவர் பேரில் விருப்பம் உண்டாயிற்று.

ஆகவே திரும்பவுமாக முனிவரிடத்தில் வந்து, நானும் உங்கள் சீடனாக வேண்டும் என்று கூறினான். அப்போது முனிவர் பிறரை நீ மன்னிக்கவேண்டும் எந்த சூழ்நிலையிலும் மன்னிக்கவேண்டும் என்று அழுத்தமாக கூறி, இதை நீ சரியாக கடைபிடிக்கவேண்டும், அப்படியானால் நான் உன்னைச் சீடனாக ஏற்றுக்கொள்ளுகிறேன் என்று கட்டளையிட்டார். உடனடியாக செல்வந்தனும் அந்த வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அதைக் கடைபிடித்து வந்தான்.

முதலாவது முறை செல்வந்தனுக்கு முன்பாக முனிவரின் மற்றுமொரு சீடன் ஒருவன் தவறு செய்தான். அதை அவன் மன்னித்தான். பின்னதாக நாளாக நாளாக அதே சீடன் திரும்பவும் திரும்பவுமாக தவறு செய்தே வந்தான்.

செல்வந்தனும் மன்னித்தே வந்தான். இப்படி ஒரே மனிதன் பலவிதங்களில் செல்வந்தனுக்கு சவாலாய் அமைந்தான். ஒருகட்டத்தில் செல்வந்தனுக்கு சளிப்பு உண்டாயிற்று. ஆனாலும் அவன் மன்னிக்க தவறவில்லை. மீண்டுமாக அதே சீடன் திரும்பவுமாக செல்வந்தனிடம் தகராறு செய்தான். ஆனால் இந்த முறையோ செல்வந்தனுக்கு வேதனையும், சங்கடமும் சேர்ந்து உண்டாயிற்று. நாம் எவ்வளவோ மன்னித்தும் இவன் திருந்தவில்லையே என்று அங்கலாய்ப்பும் அவனை வேதனைப்படுத்தியது. ஒரு பக்கம் வேகம் வந்தாலும், அதைத் தடுத்து தன்னை ஒருநிலைப்படுத்தி முனிவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவர் சொன்ன வார்த்தையை கடைபிடித்தான்.

வழக்கம்போல இரவு படுக்கைக்கு சென்றான். விடிந்ததும் எழுந்து பார்த்தபோதோ இருந்த இடம் புதிதாக அவனுக்கு இருந்தது. அந்த இடம் மிகவும் ரம்மியமாக இருந்தது. அந்த இடத்தில் பெரும் நிம்மதியை அவன் உணர்ந்தவனாக சுற்றுமுற்றும் அவன் திரும்பிப் பார்த்தான். கொஞ்ச தூரத்தில் முனிவரும் இருந்ததைக் கண்டு அவரிடத்தில் ஓடி குருவே, நான் வீட்டிலே தூங்கினேன், தற்போது எழுந்து பார்த்தால் இந்த இடத்தில் இருக்கிறேன், இது எந்த இடம்? நான் எங்கே இருக்கிறேன்? என்று கேட்டான். அதற்குள் முனிவரோ ‘இது மோட்சம்’ நாம் இங்கு வந்திருக்கிறோம் என்று கூறினார். அப்படியா என வியந்தவனாக சந்தோஷப்பட்டு தன்னை துன்பப்படுத்தியவனை படுவேகமாக சுற்றுமுற்றிலும் பார்த்தான். அவன் இல்லை என்பதை உறுதிப்படுத்திக்கொண்டான். பின்னதாக முனிவரிடம் அவனைக் குறித்து பேசினான். முனிவரோ அனைத்தையும் கேட்டுவிட்டு சிரித்தவாறே, செல்வந்தனை அருகே அழைத்து நீ உலகை வென்றுவிட்டாய் என்று கூறினார். செல்வந்தனுக்கு வார்த்தையின் அர்த்தம் புரிந்தவாறே தலையை அசைத்து ஆமோதித்தான்.

ஆம் அன்பான தேவனுடைய பிள்ளைகளே! இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நம்முடைய வாழ்க்கையிலும், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நடந்துவிடுகிறது. தேவசித்தம் நம்மில் நிறைவேறவேண்டும் என்று சொன்னால் நாமும் பலவேளைகளில் இப்படித்தான் மனிதர்களை மன்னித்து கடந்துசெல்லவேண்டும்.

**அன்புடன் போதகர்**

## வரவேற்கிறோம்!

கடந்த மாதங்களில் நமது சபை ஐக்கியத்தில் புதிய அங்கத்தினர்களாக இணைந்த உங்களை கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வரவேற்கிறோம்.

| Name | Native Place | Area |
|---|---|---|
| Mr. J. Nalam Dimalson & Family | Mangarai | Ghala |
| Mr. N. Selva Kumar | Kumarapuram Thoppur | Ghoubra |

## மகளிர் பகுதி

# சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்



சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான் (யாக்கோபு 1:12-14).

ஆபிரகாம், யோபு போன்றவர்களுக்கு சோதனை வந்ததாக பார்க்கின்றோம். இது தேவன் மீது அவர்கள் கொண்டிருந்த பக்தியையும், விசுவாசத்தையும் சோதிப்பதாக இருந்தது. இது ஒரு வகை சோதனையாகும். மற்றொரு வகை சோதனை என்னவென்றால் மனிதர்களாலும், பிசாசினாலும் சோதிக்கப்படுதல் ஆகும். நமது வாழ்க்கையில் பெரும்பாலும் இந்த இரண்டாவது வகை சோதனைதான் வருகின்றது. அதாவது சோதனையானது மனிதர்களாலும். பிசாசினாலும் நமக்கு ஏற்படுகின்றது.

### பிசாசின் சோதனை:-

பிசாசினால் ஏற்படும் சோதனைக்கு எதிர்த்து நில்லுங்கள். நற்செய்திகள் தரும் தகவல்படி, இயேசு திருமுழுக்கு பெறுகிறார். அதன்பின் யூத பாலைநிலத்தில் நாற்பது நாள்களும் இரவுமாக நோன்பு இருக்கிறார். அப்பொழுது பிசாசானவன் இயேசுவின் முன்தோன்றி அவரைச் சோதனைக்கு உட்படுத்தினான் என்றும் அந்த மூன்று சோதனைகளுக்கும் இயேசு எதிர்த்துநின்று ஜெயம் பெற்றார் என்றும் லூக்கா நான்காம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். சாத்தான் ஏவாளை சோதித்தான்; ஏவாள் பாவம் செய்தாள். இயேசுவை சோதித்தான்; இயேசு சோதனையை ஜெயித்தார். இந்த சோதனையானது தேவனிடத்திலிருந்து வருவதில்லை. வேதவசனம் சொல்கிறது. “தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல, அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான். யாக்கோபு 1:13-14-ல் கூறுகின்றது; சுயஇச்சை என்பது ஆதாம் மூலமாக நமக்குள் வந்த பாவமாகும். இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்கையில் சிலுவையில் அவர் இரத்தத்தால் நாம் கழுவப்படுகின்றோம்.

அதுவரை நம்மில் வேர்விட்டு வளர்ந்திருந்த நமது பாவத்தை அந்த இரத்தம் சுட்டெரித்து நம்மை புதிய மனிதனாக மாற்றுகின்றது. அதுவரை நமது பாவ மரத்தில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்த பிசாசுக்கு இது மிகப்பெரிய இழப்பாகும். இந்த பிசாசின் கண்கள் எல்லாம் பாவத்தின் வேர்மீதுதான் இருக்கும். அதாவது நாம் செய்த பாவத்தின் நினைவுகள், இந்த நினைவுகளை நமது நித்திரையில் நமக்கு காண்பிப்பான். மேலும் பல சூழ்நிலைகளை ஏற்படுத்தி அந்த பாவத்தை செய்பவர்கள் இன்பமாய் வாழுவதைப்போன்ற தோற்றத்தை உருவாக்கி, வெட்டப்பட்ட அந்த பழைய பாவமாகிய மரத்தை மீண்டும் வளரச்செய்ய அவனால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயலுவான். ‘‘பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்’’ (யாக்கோபு 4:7). பாவம் செய்யவேண்டும் என்ற விருப்பம் சாத்தானிடத்திலிருந்தே வருகிறது.

ஆகவே இப்படிப்பட்ட சோதனையிலிருந்து விடுவிக்கப்படும்படி நாம் எப்பொழுதும் விழித்திருந்து ஜெபிக்கவேண்டும். ‘‘நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது’’ (மாற்கு 14:38) என்று இயேசுகிறிஸ்து நமக்கு அறிவுறுத்தியுள்ளார். நாம் தோற்றுப்போக அல்ல; வெற்றிவாழ்வு வாழ்ந்து, பிசாசைத் தோற்கடிக்கவே பிரயாசப்படவேண்டும். நாம் ஆராதிக்கும் தேவன் சாத்தானை சிலுவையில் தோற்கடித்துவிட்டார். அவரது பிள்ளைகளாகிய நம்மாலும் பாவம் செய்ய தூண்டுகின்ற சாத்தானை நிச்சயமாக தோற்கடிக்கமுடியும்.

### மனிதனால் சோதனை:-

மனிதர்களால் ஏற்படும் சோதனையை பொறுமையோடு சகித்தல்வேண்டும். தேவன்மேல் பற்றுதலாயிருக்கிற மனச்சாட்சியினிமித்தம் ஒருவன் அநியாயமாய்ப் பாடுபட்டு உபத்திரவங்களைப் பொறுமையாய் சகித்தால் அதுவே பிரீதியாயிருக்கும் (1பேதுரு 2:19). இயேசு கிறிஸ்து மனிதர்களால் தமக்கு நேரிட்ட சோதனையை பொறுமையோடு சகித்தார், அதின் விளைவு அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசைக் கூட தலைக்குனிய வைத்து, ‘‘குற்றமில்லாத இரத்தத்ததை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்றான்’’ (மத்தேயு 27:4). சிலுவையில் அவரை அறைய ஒப்புக்கொடுத்த பிலாத்து சொல்கின்றார் ‘‘இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்’’ (மத்தேயு 27:24) என்று இயேசு மனிதர்களால் தமக்கு நேரிட்ட சோதனையை பொறுமையோடு சகித்தமையால், அவருக்கு எதிராக செயல்பட்டவர்களும் அவரைக் குறித்து நற்சாட்சி கொடுத்தனர். ‘‘இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும்

உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவர் பாவஞ்செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்'' (1பேதுரு 2:21-23). மனிதர்களால் ஏற்படும் சோதனையை பொறுமையோடு சகிக்கவேண்டும். அதன்பின் நிச்சயமாக நாம் பொன்னாக விளங்குவோம்.

ஏனெனில் இந்த சோதனையை சகிக்க கர்த்தர்தாமே உங்களை பெலப்படுத்துகிறார் என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். இந்த சோதனையில் வெற்றிப்பெற இறைப்பாதத்தில் விசுவாசத்துடன் ஜெபித்து நம்பிக்கையுடன் காத்திருக்க வேண்டும். இந்த பொறுமையே நம்மை உயர்த்தும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆண்டவர்தாமே உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவாராக. ஆமென்!

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் ~ எலிசா ஆக்னியூ

### விதைக்கப்படும் வாழ்வு



**மண்ணில்** : **02-02-1807**
**விண்ணில்** : **04-06-1883**
**ஊர்** : **நியூயார்க்**
**நாடு** : **அமெரிக்கா**
**தரிசன பூமி** : **இலங்கை**

இந்திய தேசத்திற்கு அருகாமையில் உள்ள நாடு இலங்கை. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளதால் இதைத் தீவு என்று அழைக்கலாம். கடல் கடந்து வாணிபம் செய்வோர் பெருகியிருந்த காலத்தில் சுவிசேஷத்தை இலவசமாகக் கொண்டு சென்றார் ஆக்னியூ.

அமெரிக்க நாட்டில் பிறந்த இவர், 8 வயதிலேயே இறைப்பணிக்குத் தன்னை தயார் செய்தார். 32-ம் வயது வரை தன் கல்விப் பணிகளை நியூயார்க் நகரத்தில் முடித்தார். ஆண்டவரின் சத்தம் காதினில் தொனிக்க இலங்கை நாட்டை நோக்கி 1839-ம் ஆண்டு சுவிசேஷ வீராங்கனையாகப் புறப்பட்டார்.

கல்விக்கூடம் ஒன்றின் முதல்வராக தனது பணியை ஆரம்பித்தார். 41 வருடங்கள் அப்பள்ளியின் பொறுப்பை மிகவும் சிறப்புடன் ஏற்று நடத்தினார். தான் கற்றுக்கொடுத்த பெண்பிள்ளைகளின் குழந்தைகளுக்கும், அவர்களது

பேரப்பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுக்கும் மாபெரும் பணியை மனநிறைவுடன் செய்தார். இதனால் "ஆயிரம் பெண்குழந்தைகளின் அம்மா" என்று அன்புடன் அழைக்கப்பட்டார். அக்காலத்தில் இவர் செய்த பணி மிகவும் சிறப்புடன் பாராட்டத்தக்கது.

இவர் கல்விப்பணியோடு கர்த்தரின் களங்கமில்லா வார்த்தைகளை கனிவுடன் கற்றுக்கொடுத்தார். இதனால் சுமார் 600-க்கும் மேற்பட்ட இளம் ஆக்னியூக்கள் உருவானார்கள். ஒவ்வொரு நாளும் தான் கற்றுக்கொடுத்த மக்களைச் சென்று பார்த்து அவர்களுடன் பேசுவது இவரது வழக்கம் ஆகும். அவர்களில் பலர் ஆசிரியர்களாகவும், பிரசங்கியாளர்களாகவும், மருத்துவர்களாகவும், வக்கீல்களாகவும், பிரபல தொழில் செய்பவர்களாகவும் மாறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

43 வருடங்கள் இலங்கையிலேயே தங்கி அங்கேயே ஊழியம் செய்து கோதுமை மணியாக விதைக்கப்பட்டார் ஆக்னியூ.

அன்பரே! உங்கள் ஊழிய பணித்தளத்தைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : தன்னைத் தானே தியாகம் செய்வது, அன்றாடம் செலுத்தவேண்டிய விலைக்கிரயம் ஆகும் - ஆஸ்வால்டு சேன்டர்ஸ்

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! கோதுமை மணி போன்று, நானும் விதைக்கப்பட்டு உமக்குள் கனிதர முன்வருகின்றேன்.

**தியானத்திற்கு** : யாத். 7-8, சங். 60-61, ரோமர் 12.

(**நன்றி**: 365 மிஷனெரிகளின் வரலாறு)

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ பெப்ரவரி 2020

| | | |
|---|---|---|
| 07-02-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Josephin Anto Kingston |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Kasiraja |
| 14-02-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Miss. Johanna Shirley |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Kingsly |
| 21-02-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Miss. Jerlin Stelina |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Livingston |
| 26-02-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mr. Bensam |
| 28-02-2020 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Mahizha Jenkin Raj |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Michael |

## பாடலின் பின்னணியம்

# உம் அண்டை கர்த்தரே
## (Nearer my God to Thee)

ஆதியாகமம் 28:12

பாடல் : சாரா பிளவர் ஆடம்ஸ்
ராகம் : லவ்வல் மேசன் பண்டிதர்

1. உம் அண்டை கர்த்தரே,
   நான் சேரட்டும்;
   சிலுவை சுமந்து
   நடப்பினும்,
   என் ஆவல் என்றுமே
   உம் அண்டை, கர்த்தரே,
   நான் சேர்வதே.

யாக்கோபு தன் சகோதரனாகிய ஏசாவுக்கு பயந்து, தன் பெற்றோரையும், சுய தேசத்தையும் விட்டு தனியாக தப்பி ஓடும்போது, இராக்காலத்தில் பெத்தேலில் ஒரு கல்லைத் தலையணையாகக் கொண்டு தூங்குகையில் கண்ட தரிசனம் நமக்கு தெரியும். அச்சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பாடல் இது.

இப்பாடலை எழுதியவர் சாரா பிளவர் ஆடம்ஸ் அம்மையார். ஒருநாள் இரவு அம்மையார், பெத்தேலில் யாக்கோபு கண்ட கனவைக் கண்டார். எந்த கஷ்டமான நிலையிலும் கடவுள் தமது அடியார்களுக்கு அருள் செய்வார் என்னும் உறுதியான நம்பிக்கை அவர்களுக்கு உண்டாயிற்று. விழித்தெழும்பியதும் இக்கனவை ஒரு பாடலாக எழுத வேண்டும் என்னும் ஆவல் கொண்டபோது, இப்பாடலின் சில வரிகள் மனதில் உண்டாயின. சில தினங்களுக்குப்பின், திரித்துவத்தை ஏற்றுக்கொள்ளாத யூனிட்டேரியன் சபையைச் சேர்ந்த உல்லியம் பாக்ஸ் போதகர், தமது சபையில் யாக்கோபைக் குறித்த பிரசங்கம் செய்யப்போவதாக அம்மையாரிடம் கூறினார். அவ்வாரதனையில் பாடுவதற்கு யாக்கோபின் தரிசனத்தைப் பற்றிய பாடல்கள் ஏதாவது உண்டா என அம்மையார் போதகரிடம் கேட்டார். பாடல் ஒன்றும் இல்லையெனப் போதகர் கூறவே, ஆடம்ஸ் அம்மையார் உடனே உட்கார்ந்து, ஏற்கெனவே தன் மனதில் உருவான 'உம்மண்டை கர்த்தரே' என்னும் பாடலை எழுதி, தன் சகோதரி எலைசாவின் உதவியால் ஓர் இராகத்தையும் அமைத்துக் கொடுத்தார். இது இப்போது நாம் பாடும் ராகமல்ல. அவ்வாராதனையில்தான் இப்பாடல் முதல் முறையாக பாடப்பட்டது. பின்னர் இப்பாடலின் சிறப்பை உணர்ந்த சங்கீத நிபுணரான லவ்வல் மேசன் பண்டிதர், இப்போது நாம் பாடிவரும் 'Bethany' என்னும்

அழகிய இராகத்தை அமைத்தார். இவ்வளவு துரிதமாக எழுதப்பட்ட இப்பாடலானது உலக முழுவதிலும் பாராட்டப்படும் என்று அம்மையார் நினைக்கவேயில்லை.

உலகத்திலே மிகப் பெரிய கப்பல் என அக்காலத்தில் கருதப்பட்ட 'டைட்டானிக்' என்னும் பிரிட்டிஷ் கப்பல், 1912-ம் ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்கு பிரயாணம் செய்து கொண்டிருந்தது. கப்பலில் 2000-த்துக்கதிகமான பேர் இருந்தனர். ஏப்ரல் 14-ம் தேதி நள்ளிரவில், மிதந்து வந்த ஒரு பனிமலையில் கப்பல் மோதி, உடைந்து அமிழத் தொடங்கியது. பிரயாணிகளில் மூன்றிலொரு பகுதிக்குத் தான் உயிர் மீட்கும் படகுகள் (Life boats) இருந்தன. ஆயினும் பிரயாணிகள் கலக்கம் அடையவில்லை. கப்பலின் வாத்தியக்குழுவினர் (Band) 'உம்மண்டைக் கர்த்தரே' என்னும் பாடலின் இராகத்தை தொனிக்க, பிரயாணிகள் யாவரும் இப்பாடலை உரத்த சத்தமாய் பாடியவண்ணம் கப்பல் அமிழ்ந்தது. பிரயாணிகளில் சுமார் எழுநூறு பேர் மட்டும் உயிர் தப்பினர்.

இப்பாடலை எழுதிய சாரா பிளவர் அம்மையார் இங்கிலாந்தில் ஹார்லோ நகரில் 1805-ஆம் ஆண்டு, பெப்ரவரி மாதம், 22-ம் தேதி பிறந்தார். இளவயதிலேயே தாயார் காசநோயினால் இறந்துபோகவே, சாராவும், சகோதரியாகிய எலைசாவும் தந்தையால் வளர்க்கப்பட்டனர். பின் அம்மையார் லண்டன் மாநகர் சென்று, உல்லியம் ஆடம்ஸ் என்னும் சிற்பக்கலை நிபுணரை மணந்து, குடும்வ வாழ்க்கை நடத்தி வந்தார். லண்டன் மாநகரில் ஒரு திறமையுள்ள நடிகையாகவும் இருந்தார். ஆனால் சுகவீனத்தினிமித்தம் நாடக மேடையை விட்டு, இலக்கியம் எழுதுவதை மேற்கொண்டார். பின்னால் தந்தையாரும் இறந்து போகவே, சகோதரியாகிய எலைசாவும் சாரவுடைய வீட்டிலே வசித்து வந்தார். 1847-ம் ஆண்டு, சாரா ஆடம்ஸ் அம்மையார் ரோகத்தால் பீடிக்கப்பட்டு, 1848-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம், 11-ம் தேதி, தமது 43-வது வயதில் காலமானார்.

சாரா ஆடம்ஸ் அம்மையார் நூற்றுக்கதிகமான பாடல்கள் எழுதியுள்ளார். இப்பாடல்களுக்கு சகோதரி எலைசா இராகங்கள் அமைத்து வந்தார். ஆனால் 'உம்மண்டை கர்த்தரே' என்னும் ஒரே பாடல் தான் கிறிஸ்தவ உலகில் வெகுவாக பாடப்பட்டு வருகிறது. அவரது இதர பாடல்கள் பொதுவாக அமெரிக்காவில், குறிப்பாக யூனிட்டேரி சபைகளில் பாடப்பட்டு வருகின்றன.

**பாடகர் குழு – C.S.I Tamil Church Oman** **(நன்றி: அமைதி நேர ஊழிய வெளியீடு)**

## நிகழ்வும் - பாடமும்

**மனிதன் தன் கடவுளிடம் கேட்கும் சில கேள்விகளும் அதற்கு கடவுள் தரும் பதில்களும்!**

கடவுளே ஏன் இப்படி? "என்னை ஏன் பலவீனப்படுத்தி விட்டீர்?"
*"நீ என் பலத்தைச் சார்ந்து வாழப் பழகிக் கொள்வதற்காக"*

கடவுளே, "எனக்கு ஆதரவானவர்களை ஏன் அப்புறப்படுத்தினீர்?"
*"நீ நிலையற்ற மனிதர்களை சார்ந்து வாழ்வது சரியல்ல என்பதால்"*

கடவுளே, "குழப்பமான சூழ்நிலைகளை ஏன் எனக்கு அனுமதித்தீர்"
*"நீ தெளிவான முடிவுகளை எடுக்கும் பயிற்சியை பெறுவதற்காக"*

கடவுளே, "நான் கேட்டதையெல்லாம் நீர் ஏன் தரவில்லை"
*"உனக்கு எது தேவையோ அதை மட்டுமே நான் தர விரும்புவதால்"*

கடவுளே, "அநீதியாளர்களை ஏன் எனக்கு எதிராக ஜெயிக்கவிட்டீர்"
*"நீ நீதியினிமித்தம் துன்பப்படுவது அவசியம் என்பதால்"*

கடவுளே, "விசுவாசித்து கேட்டவைகளை நீர் எனக்கு அருளவில்லையே, ஏன்?
*"நீ சரியானவைகளை விசுவாசித்து பழகுவதற்காக"*

கடவுளே, "மற்றவர்களை மாற்றாமல் என்னையே நீர் மாறச்சொல்கிறீரே?"
*"நீ உன்னை பகைப்பவர்களை நேசித்து அவர்களை என்னை நேசிக்கிறவர்களாக மாற்றத்தான்"*

கடவுளே, "அவசியமான சில நன்மைகளை நீர் எனக்கு தரவில்லையே"
*"மிகத் தேவையானது இல்லாமலும், நீ வாழப் பழகிகொள்ள வேண்டுமென்பதால்"*

கடவுளே, "ஏன் எனது நல்லத் திட்டங்களை நீர் தோல்வியடையச் செய்தீர்?"
*"அதை விட நல்லத் திட்டங்களை உனக்காக நான் வைத்திருப்பதால்"*

கடவுளே, "வேறு சிலருக்கு நீர் அளித்த உயர்வை எனக்கு நீர் தரவில்லையே?"
*"அவர்களின் அழைப்பு வேறு, உன் அழைப்பு வேறு என்பதால்"*

கடவுளே, “நீண்டகாலம் என்னைக் காக்க வைத்துவிட்டீரே?”
*“நான் தரும் நன்மைகள் உன்னில் நிலைத்திருக்க அந்த காத்திருப்பு அவசியம் என்பதால்”*

கடவுளே, “நான் மட்டும் சிறு தவறு செய்தாலும் தண்டித்து விடுகிறீரே”
*“என் பிள்ளையிடம் சிறுதவறும் இல்லாத பரிசுத்த வாழ்வை விரும்புவதால்”*

கடவுளே, “என்னுடைய பலக் கேள்விகளுக்கு நீர் பதில் தருவதேயில்லையே?”
*“நீ விளக்கங்களை சார்ந்தல்ல, விசுவாசத்தைச் சார்ந்து வாழ்வதற்காக”*

## சோதனையில் வெற்றி

சோதனையின் மிகுதியால் வாழ்வு இழந்து கவலைபடுகிறவர்களுக்கு அந்த சோதனையிலிருந்து அவர்களை மீட்டு, மறுபடியும் வாழ்வு அருளுவது என்பது இயேசுவுக்கு அதிக விருப்பமாக காணப்பட்டது. பல்வேறு நிலைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அவர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களை சந்தித்து புதுவாழ்வு அருளினார்.

### 1. சோதனையில் பெலன்:-

மனித வாழ்வில் சந்திக்கும் சோதனைகளில் பலவீனமும் ஒன்று. பொதுவாக இந்த பலவீனம் சரீர நிலையிலும், ஆன்மீக நிலையிலும் தொடர்புடையது. சரீர பலவீனம் உடல் மாற்றுத்திறன் வாயிலாக வெளிப்படுகிறது. இது வாழ்வில் சோர்புக்குள்ளாக மானுடத்தை தள்ளிவிடுகிறது. ஆன்மீக பெலவீனம் விசுவாச வாழ்வில் வீழ்ந்துபோகும்போது நம்மில் அறியப்படுகிறது.

18 வருட பெலவீனப்படுத்தும் ஆவிக்கொண்டவளாய் வாழ்க்கையில் மிகப்பெரிய சோதனையோடு எந்த நிலையிலும் கொஞ்சம்கூட நிமிர்ந்து வாழமுடியாத கடின வாழ்வின் ஊடாக வாழ்ந்த பெண்மணியினை இயேசு சந்தித்தார். நமக்காக பெலவீனங்களை, சோதனைகளை ஏற்றுக்கொண்ட கிறிஸ்து அவளைக் கண்டு அழைத்து “உன் பலவீனத்தினின்று விடுதலையாக்கப்பட்டாய்” என்று கூறி அற்புதம் செய்தார். இயேசுவின் வார்த்தையால் அவளது பெலவீனம் நீங்கி பெலன் பெற்றாள். நிமிர்ந்து நடந்து இறைவனை மகிமைப்படுத்தினாள். சோதனையிலும் பெலன் தந்து நம்மை பெலப்படுத்த நம் தேவன் வல்லவராய் இருக்கிறார்.

## 2. சோதனையில் அமைதி:-

மனித வாழ்வின் முறைபற்றி பிரசங்கி நூலில், அழ ஒரு காலமுண்டு; நகைக்க ஒரு காலமுண்டு என வாசிக்கிறோம். அழுகையும் நகைப்பும் ஒன்றோடொன்று எதிர்மறையாகவே உள்ளது. மனித வாழ்வோடு அவை தொடர்புடையவை.

அழுகை பாச உணர்வின் வெளிப்பாடாகவும், வாழ்வில் பிறரால் இகழ்ந்து தள்ளப்படும்போதும், சோதனைகள் ஏற்படும்போதும், வியாதி நேரத்திலும் மனிதனின் உள்ள உணர்வின் எதிரொலிப்பாக வெளிப்படுகிறது.

கணவன் இல்லை, ஆதரவுக்கு உறுதுணையாக ஒரே மகன். அவனும் இறந்துபோனான்; நான் என்ன செய்வேன்? யார் துணை செய்வார் என்ற கேள்விகளோடு தனக்கு வந்த சோதனையை நினைத்து அழுகின்றாள் நாயீன் ஊர் விதவை. உன் கண்ணீரைக் கண்டேன் என்ற ஆண்டவரின் திருவார்த்தை இங்கு செயலாக்கம் பெற்றது. இறைமகன் இயேசு நாயீன் ஊர் பெண்மணியின் சோதனையில் அமைதி கொடுக்க விரும்புகிறார். லூக்கா 7:14-ன் படி இறந்துபோன வாலிபனின் பாடையைத் தொட்டு, ‘‘வாலிபனே எழுந்திரு’’ என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். தாயின் அழுகை மாறி உயிரோடு மகனைப் பெற்று சந்தோஷப்பட்டார்.

நாம் சோதனையிலும், வியாதியிலும், இழப்புகளிலும் மூழ்கி தவிக்கும் வேளையில் வனாந்தரத்தில் ஆகாரின் கண்ணீரைக் கண்ட தேவனும், ஆலயத்தில் அன்னாளின் அழுகையைக் கண்ட தேவனுமாகிய சர்வ வல்லமை பொருந்திய ஆண்டவர், நம் சோதனைகளை மாற்றி அமைதியை கட்டளையிட நம்மை அர்ப்பணிப்போம்.

## 3. சோதனையில் புதுவாழ்வு:-

இயேசுவை சந்தித்து தன் உள்ளத்தின் வேதனையை வெளிப்படுத்திய தந்தை தன் மகனுக்கு நேர்ந்த சோதனையான வாழ்விலிருந்து பாதுகாக்க, மறுவாழ்வுக்கு கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்ததாகவும், இயேசுவினுடைய சீடர்கள் வாயிலாக முயற்சியெடுத்தும் பயன் தரவில்லை என்பதை கண்ணீருடன் வெளிப்படுத்துகிறார். வேதனையைப் பகிர்ந்து கொள்கிறவர் தன் மகனை ஒரு ‘அசுத்த ஆவி’ அலைக்கழிக்கிறதாகவும், அதனுடைய கொடூரம் அவனுடைய சரீரத்தின் அவயவங்களைப் பாதிப்படைய செய்வதாகவும் காணப்படுவதை விளக்குகிறார். ஆகவே தன் மகனை இழந்து விடுவேனோ என்ற வேதனையை வெளிப்படுத்துகிறார். இந்த வாலிபனுக்கு வந்திருக்கும் சோதனையான நிலையைப் புரிந்துகொள்கிற இயேசு அவனை அலைக்கழித்த ஆவியை அதட்டி அவனைக் குணமாக்கி அவனுடைய தகப்பனாரிடத்தில் ஒப்படைக்கிறார் (லூக். 9:42).

தன் மகனைக் குறித்து இயேசுவின் கவனத்திற்கு கொண்டு சென்றால் தன் மகனுடைய வாழ்க்கையிலுள்ள சோதனைகள் மாறும் என்று நினைத்த தந்தையின் விசுவாசம் மகனுக்கு புது வாழ்வை கொடுத்தது. நாமும் புதுவாழ்வு தரவல்ல இறைவனை நம்பிக்கையுடன் தேடுவோம்.

**- V. G. மஹிழா ஜெங்கின் ராஜ்**

## துக்கம் பகிர்வோம்

### கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினர் Mr. Kasi Raja அவர்களின் தகப்பனார் Mr. Siva Subramanian அவர்கள் ஜனவரி மாதம் 4-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

நமது சபை அங்கத்தினர் Mr. T. N. Brejin அவர்களின் சகோதரர் Mr. Bibin அவர்கள் ஜனவரி மாதம் 16-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

நமது சபை அங்கத்தினர் Mrs. Golden Irene Sheeja Robin அவர்களின் தகப்பனார் Mr. Gnanadhas அவர்கள் பெப்ரவரி மாதம் 5-ஆம் தேதி கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றார்கள். அவர்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

# கண்ணீர் அஞ்சலி

**மலர்ந்தது**
18-11-1940



**உதிர்ந்தது**
10-01-2020

**His Majesty Sultan Qaboos Bin Said, கடந்த 49 ஆண்டுகாலமாக நாம் வாழுகின்ற இந்த ஓமான் நாட்டை நல்வழிபடுத்தி சிறப்பாக ஆட்சிசெய்து 10-01-2020 அன்று இறை அழைப்பை பெற்றார்கள். அவர்கள் குடும்பத்தினர்கும் இந்நாட்டில் வாழுகின்ற அனைத்து மக்களுக்கும் திருச்சபையின் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறோம்.**

# வாழ்த்துகிறோம்

**நாம் வாழுகின்ற ஓமான் நாட்டின் புதிய மன்னராக பொறுப்பேற்றிருக்கும் His Majesty Sultan Haitham Bin Tariq Al Said அவர்களை திருச்சபையின் சார்பில் வாழ்த்துகிறோம்.**

**அவர்கள் தொடர்ந்து இந்நாட்டை சிறப்பாக வழிநடத்த இறைவன் அருள்புரிவாராக.**



தென்னிந்திய திருச்சபையின் புதிய பிரதம பேராயராக (2020 – 2023) தெரிவு செய்யப்பட்டிருக்கும் **பிரதம பேராயர் பேரருட்பெருந்திரு. A. தர்மராஜ் ரசாலம்** அவர்களை ஓமான் C. S. I. தமிழ் திருச்சபையின் சார்பில் வாழ்த்துகிறோம்.

"அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும்" என்ற வேதவாக்கின்படி இறைவன் அமைக்க விரும்பும் இறையரசின் தகவுகளையும் இந்திய அரசியல் அமைப்பின் நேயத்திற்கு மாண்பு சேர்க்கும் வகையிலும் தொடர்ந்து தென்னிந்திய திருச்சபைகளை வழிநடத்த பிரதம பேராயர் அவர்களை வாழ்த்துகிறோம்.



## பிப்ரவரி 2020 மாத கேள்விகள்
## (சங்கீதம் 83 - 93 வரை)

1. கர்த்தரின் தயவினால் உயருவது எது?
2. மத்தியானத்தில் மனிதனை பாழாக்குவது எது?
3. நித்திய நாளாக ஆலய அலங்காரமாக இருப்பது எது?
4. புது எண்ணெயால் செய்யப்படுவது எது?
5. தேவன் சமுத்திரத்தின் எதை ஆளுகிறவர்?
6. நிலத்துக்கு எருவாய் போனவர்கள் யார்?
7. உம்முடைய பயங்கரங்கள் என்னை ______ பண்ணுகிறது?
8. எங்கள் நாட்களை _____ அறிவை எங்களுக்கு போதித்தருளும்?
9. புல்லைப்போல் தழைப்பவன் யார்?
10. பீடங்களண்டையில் அடைக்கலான் குருவிக்கு கிடைத்தது எது?
11. கர்த்தரின் பார்வைக்கு ____ ஆண்டுகள் நேற்றைய நாள்போல உள்ளது?
12. சத்தியம் எங்கிருந்து முளைக்கும்?
13. கர்த்தரின் ஆலோசனைகள் மகா ஆழமானவைகள் என்பதை அறியாதவன் யார்?
14. எதை ஒருமுகப்படுத்த தாவீது கர்த்தரிடம் வேண்டினார்?
15. மனிதனின் ஆயுட்காலம் பெலத்தின் மிகுதியால் எவ்வளவு?
16. கர்த்தர் பராக்கிரமத்தை கச்சையாக கட்டியிருப்பதால் அசையாதிருப்பது எது?
17. கர்த்தர் _________ வாசல்களில் பிரியமாயிருக்கிறார்?
18. தேவனுடைய பிரகாரங்களில் செழித்து இருப்பவர்கள் யார்?
19. பதினாயிரம் - எத்தனை எண்ணிக்கை?
20. கர்த்தர் யாரை வெட்டுண்ட ஒருவனைப்போல் நொறுக்கினார்?

## ஜனவரி 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. சாலேமில் - சங். 76:2
2. எப்பிராயீம் புத்திரர் - சங். 78:9
3. பெருமை – சங். 73:6
4. காட்டுப்பன்றி – சங். 80:13
5. தாவீது – சங். 78:70
6. சத்துரு – சங். 74:5
7. நாசமடைவார்கள் - சங். 73:27
8. அத்திமரம் - சங். 78:47
9. தேவன் - சங். 75:7
10. மனுஷன் - சங். 78:25
11. நீதி – சங். 82:3
12. பிள்ளைகளுக்கு – சங். 78:4
13. சீயோன் பர்வதம் - சங். 74:2
14. துன்மார்க்கர் - சங். 75:10
15. இச்சைக்கேற்ற போஜனத்தைக்கேட்டு – சங். 78:18
16. மோசே, ஆரோன் - சங். 77:20
17. எக்காளம் - சங். 81:3
18. கொடுமையுள்ள குடியிருப்புகளால் - சங். 74:20
19. மேரிபா – சங். 81:7
20. ஏழத்தனையாக – சங். 79:12

## ஜனவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Anbu Selvi Daniel Raj | Mrs. Josephin Anto Kingston | Mrs. Regin Justa Vinolin |
| Mrs. Ancy Daniel | Mrs. Juslin Jaslin | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Felsi Rani John | Mrs. Mary Praveena Gobinath | Mrs. Shiney Johan |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Nisha Rajan | Mrs. Thamari Johnson |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Percy Jean | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Jenshy N. Lenin | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Pushpa Rani Moorthy | |

## பிப்ரவரி 2020 மாத கேள்விகள்
## (எஸ்றா 1 முதல் 10 வரை)

1. மகேலியின் புத்திரரில் புத்தியுள்ள மனுஷன் யார்?
2. ஏழாம் மாதம் முதல் தேதியில் கர்த்தருக்குச் செலுத்தப்பட்ட பலி எது?
3. எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தின் அஸ்திபாரத்தைப் போட்டது யார்?
4. ஆலயத்து பணிமுட்டுகளை மித்திரேதாத் யூதாவின் அதிபதியாகிய யாரிடத்தில் எண்ணிக் கொடுத்தான்?
5. அக்மேதா பட்டணத்தின் அரண்மனையிலே என்ன அகப்பட்டது?
6. கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகன் யார்?
7. எசேக்கியாவின் சந்ததியான அதேரின் புத்திரர் எத்தனை பேர்?
8. பெர்சியா ராஜாவான அர்தசஷ்டாவுக்கு எழுதப்பட்ட மனு எந்த எழுத்தில் எழுதியிருந்தது?
9. ஆசாபின் குமாரராகிய லேவியரை சிற்பசாரிகள் எதற்கு நிறுத்தினார்?
10. கல்தேயன் யார்?
11. கிழித்துக்கொண்ட வஸ்திரத்தோடும், சால்வையோடும் முழங்காற்படியிட்டு ஜெபித்தவன் யார்?
12. சிறையிலிருப்பிலிருந்து வந்தவர்கள் எப்போது பஸ்காவை ஆசரித்தார்கள்?
13. தலைவனாகிய இத்தோவின் ஸ்தலம் எது?
14. ஒரு ஆசாரியன் எழும்புமட்டும் மகா பரிசுத்தமானதிலே புசிக்கத்தகாதென்று சொன்னது யார்?
15. எருசலேம் ஆலயம் எந்த மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டது?
16. யார் ராஜ்யபாரம்பண்ணின இரண்டாம் வருஷமட்டும் எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலய வேலை நிறுத்தப்பட்டிருந்தது?
17. எஸ்றா தேவனுடைய ஆலயத்துக்கு முன்னிருந்து எழுந்து எங்கு சென்றார்?
18. ஆசாரியனாகிய உரியாவின் குமாரன் யார்?
19. யூதருடைய மூப்பரின் வேலையைத் தடுக்காதபடிக்கு யாருடைய கண் அவர்கள் மேல் வைக்கப்பட்டிருந்தது?
20. செயல்தியேலின் குமாரன் யார்?

## ஜனவரி 2020 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. கீயோன் - 2நாளா. 32:30
2. இருபத்து மூன்று – 2நாளா. 36:2
3. எசேக்கியா ராஜா – 2நாளா. 31:20
4. லேவியர் - 2நாளா. 35:11
5. யோசியா – 2நாளா. 34:1
6. இன்னோம் குமாரரின் பள்ளத்தாக்கு – 2நாளா. 33:6
7. சிதேக்கியா – 2நாளா. 36:10
8. சிமேயி – 2நாளா. 31:12,13
9. மனாசே – 2நாளா. 33:11
10. ஆமோத் - 2நாளா. 32:20
11. எலியாக்கீம் - 2நாளா. 36:4
12. உல்தாள் - 2நாளா. 34:22
13. கோரே – 2நாளா. 31:14
14. யோயாக்கீன் - 2நாளா. 36:9
15. மனாசே – 2நாளா. 33:1
16. எதுத்தூன் - 2நாளா. 35:15
17. சனகெரிப் - 2நாளா. 32:21
18. இரண்டு வருஷம் - 2நாளா. 33:21
19. அகிக்காமு – 2நாளா. 34:20
20. இல்க்கியா – 2நாளா. 34:14,15

## ஜனவரி மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jino John |
| Mr. Anshio Shajin | Mr. Johan Pratheep |
| Mr. Austin Daniel Raj | Mr. Justus Martin |
| Mr. Bejo Nelson | Mr. Kanagavel |
| Mr. Daniel Raj P. | Mr. Lenin Raj |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Rajan V. N. |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |

# May God Bless All

## Birthday Celebrants – February 2020

| | |
|---|---|
| 01$^{st}$ Feb | Master. Devarsh Ruban, S/o Mr. Atheesh |
| 12$^{th}$ Feb | Mrs. Neethu, W/o Mr. Bino Vetha Raja Sing |
| 12$^{th}$ Feb | Miss. Shirley Susan Issac, D/o Mr. Isaac Solomon |
| 12$^{th}$ Feb | Master. A.S. Asher Juish Bension, S/o Mr. Arun Paul |
| 14$^{th}$ Feb | Mr. Jenkin Raj |
| 14$^{th}$ Feb | Miss. Angeline, D/o Mr. T. Raju |
| 14$^{th}$ Feb | Miss. Jessica, D/o Mr. T. Raju |
| 15$^{th}$ Feb | Miss. Herlin Reeba, D/o Mr. Herbert |
| 16$^{th}$ Feb | Miss. Tanisa, D/o Mr. Ramesh |
| 16$^{th}$ Feb | Mrs. Boopathi, W/o Mr. Baskar |
| 16$^{th}$ Feb | Mr. Anto Kingston |
| 16$^{th}$ Feb | Miss. Christilin Vijisha, D/o Mr. Jino John |
| 18$^{th}$ Feb | Mr. Venil Sing |
| 19$^{th}$ Feb | Mr. S. Kannan |
| 21$^{st}$ Feb | Miss. Lindsy R. Macedo, D/o Mr. Rex Macedo |
| 21$^{st}$ Feb | Miss. Zaralin Pius Justa, D/o Mr. Vinolin |
| 22$^{nd}$ Feb | Mrs. Vanitha Rani, W/o Mr. J.P. Prince. |
| 23$^{rd}$ Feb | Mrs. Femila Berin, W/o Mr. Berin Raja |
| 24$^{th}$ Feb | Mr. Berin Raja |
| 24$^{th}$ Feb | Master. Bebin Rufus, S/o Mr. Kannan |
| 25$^{th}$ Feb | Miss. B. N. Mahima, D/o Mr. Bino Vetha Raja Sing |
| 26$^{th}$ Feb | Miss. A. Beryl Ida, D/o Mr. D. Ahigen Paul |
| 28$^{th}$ Feb | Mr. Edward Sam |
| 29$^{th}$ Feb | Mrs. Eben Silviya, W/o Mr. Ennesar |
| 29$^{th}$ Feb | Miss. Liyana Jeshu, D/O Mr. Livingston |

# Wedding day Anniversaries – Feb 2020

| | |
|---|---|
| 04th Feb | Mrs. & Mr. Gobinath |
| 09th Feb | Mrs. & Mr. Bino Vetha Raja Sing |
| 14th Feb | Mrs. & Mr. Ramesh |
| 20th Feb | Mrs. & Mr. Johnson Raj |
| 21st Feb | Mrs. & Mr. Johan Pratheep |

## ஜெபிக்க சில குறிப்புகள்

**திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- நமது திருச்சபை போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழுவுக்காகவும், அவர்கள் தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிடவும் ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர்கள் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- நமது பேராயத்தின் பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறைபணி மூலம், இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு, பேராயம் நல்ல முறையில் இயங்கவும், இறையருள் வேண்டி மன்றாடுவோம்.

## மிஷனெரி பணிகளுக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

➢ இந்திய தேசத்தின் பொருளாதார வீழ்ச்சி நிலைமாற மன்றாடுவோம்.

➢ உலகம் முழுவதும் கொரோனோ வைரஸ் மூலம் பரவிவரும் தொற்றுநோய் விரைவில் குணமடைய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

**குடும்பங்களுக்காக ஜெபிக்க:-**

➢ இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

➢ சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.

➢ வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.

➢ தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.

➢ கருவுற்றிருக்கிற சகோதரிகளின் உடல்நலத்திற்காகவும், சுகமான விடுதலைக்காகவும், தாய் சேய் ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.

## அனுதின மன்னா – பிப்ரவரி 2020

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| **தேதி** | **நாள்** | **திருமறைப் பாடம்** | **அனுதின மன்னா** | **ஓராண்டில் திருமறை** |
|---|---|---|---|---|
| பிப்ரவரி 1 | சனி | யாக். 2:1-10 | யாக். 2:8 | லேவி.12-14 அதி. |
| பிப்ரவரி 2 | ஞாயிறு | கலா. 3:21-29 | கலா. 3:26 | லேவி.15-17 அதி. |
| பிப்ரவரி 3 | திங்கள் | எசே. 37:1-14 | எசேக். 37:5 | லேவி.18-20 அதி. |
| பிப்ரவரி 4 | செவ்வாய் | எசே. 34:22-28 | எசேக். 34:27 | லேவி.21-23 அதி. |
| பிப்ரவரி 5 | புதன் | யாக். 2:1-10 | யாக். 2:8 | லேவி.24-25 அதி. |
| பிப்ரவரி 6 | வியாழன் | எசே. 11:14-20 | எசேக். 11:20 | லேவி.26-27 அதி. |
| **பிப்ரவரி 7** | **வெள்ளி** | **ஏசாயா 42:1-7** | **ஏசா. 42:3** | **எண். 1-2 அதி.** |
| பிப்ரவரி 8 | சனி | அப். 5:25-32 | அப். 5:31 | எண். 3-4 அதி. |
| பிப்ரவரி 9 | ஞாயிறு | மாற்கு 7:31-37 | மாற்கு 7:34 | எண். 5-6 அதி. |
| பிப்ரவரி 10 | திங்கள் | மாற்கு 6:30-34 | மாற்கு 6:34 | எண். 7-8 அதி. |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| பிப்ரவரி 11 | செவ்வாய் | யாத். 15:23-27 | யாத். 15:29 | எண். 9-11 அதி. |
| பிப்ரவரி 12 | புதன் | எரே. 8:18-22 | எரே. 8:21 | எண். 12-14 அதி. |
| பிப்ரவரி 13 | வியாழன் | எரே. 30:12-20 | எரே. 30:17 | எண். 15-17 அதி. |
| **பிப்ரவரி 14** | **வெள்ளி** | **எசே. 34:1-16** | **எசே. 34:16** | **எண். 18-20 அதி.** |
| பிப்ரவரி 15 | சனி | 1பேது. 2:18-25 | 1பேது. 2:24 | எண். 21-23 அதி. |
| பிப்ரவரி 16 | ஞாயிறு | மத். 7:15-23 | மத். 7:17 | எண். 24-26 அதி. |
| பிப்ரவரி 17 | திங்கள் | ரோமர் 8:19-27 | ரோமர் 8:19 | எண். 27-30 அதி. |
| பிப்ரவரி 18 | செவ்வாய் | சங்கீதம் 19 | சங். 19:1 | எண். 31-33 அதி. |
| பிப்ரவரி 19 | புதன் | ஏசா. 65:17-19 | ஏசா. 65:17 | எண். 34-36 அதி. |
| பிப்ரவரி 20 | வியாழன் | மத். 6:25-34 | மத். 6:26 | உபா. 1-2 அதி. |
| **பிப்ரவரி 21** | **வெள்ளி** | **சங். 148:1-14** | **சங். 148:5** | **உபா. 3-4 அதி.** |
| பிப்ரவரி 22 | சனி | மாற். 16:15-20 | மாற். 16:15 | உபா. 5-7 அதி. |
| பிப்ரவரி 23 | ஞாயிறு | ஏசா. 44:21-28 | ஏசா. 44:22 | உபா. 8-11 அதி. |
| பிப்ரவரி 24 | திங்கள் | கலா. 6:12-18 | கலா. 6:15 | உபா. 12-15 அதி. |
| பிப்ரவரி 25 | செவ்வாய் | ஆதி. 33:1-16 | ஆதி. 33:10 | உபா. 16-19 அதி. |
| பிப்ரவரி 26 | புதன் | மாற். 1:9-15 | மாற்கு 1:15 | உபா. 20-23 அதி. |
| பிப்ரவரி 27 | வியாழன் | யோவே.2:17-19 | யோவே.2:15 | உபா. 24-27 அதி. |
| **பிப்ரவரி 28** | **வெள்ளி** | **2நாளா.6:32-42** | **2நாளா. 6:37** | **உபா. 28 அதி.** |
| பிப்ரவரி 29 | சனி | 2நாளா.33:1-16 | 2நாளா.33:16 | உபா. 29 அதி. |
| மார்ச் 1 | ஞாயிறு | 1யோ. 1:5-10 | 1யோ. 1:7 | உபா. 30-31 அதி. |
| மார்ச் 2 | திங்கள் | மத். 5:1-12 | மத். 5:8 | உபா. 32-34 அதி. |
| மார்ச் 3 | செவ்வாய் | எபேசி. 4:25-32 | எபேசி. 4:29 | யோசு. 1-4 அதி. |
| மார்ச் 4 | புதன் | 1பேது. 2:11-17 | 1பேது. 2:12 | யோசு. 5-7 அதி. |
| மார்ச் 5 | வியாழன் | நீதி. 4:20-27 | நீதி 4:25 | யோசு. 8-10 அதி. |
| **மார்ச் 6** | **வெள்ளி** | **ஆதி. 2:4-15** | **ஆதி 2:15** | **யோசு.11-14 அதி.** |

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும் பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது (சங்கீதம் 19:7).**

# இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 06-02-2020 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 07-02-2020 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 08-02-2020 | சனி – உபவாச ஜெபக் கூட்டம்<br>இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30–1:00 |
| 14-02-2020 | வெள்ளிஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 20-02-2020 | வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 20-02-2020 | வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00–11:00 |
| 21-02-2020 | வெள்ளி – பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 26-02-2020 | சாம்பல் புதன் சிறப்பு ஆராதனை |
| 28-02-2020 | வெள்ளிஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 01-03-2020 | ஞாயிறு - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 05-03-2020 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 06-03-2020 | வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**